பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 08 ஞாயிற்றுக்கிழமை (24.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 299

# படைத்தளபதிகள், உயரதிகாரிகள் நேற்று யாழ். குடாநாட்டுக்கு வருகை

## பலாலியில் உயர் மட்டப் பாதுகாப்பு மாநாடு எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர் 24

**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக்குழுவினர் நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம்செய்து, இங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்தனர். எதிர்காலப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்தும் விவாதித்தனர்.**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ, பாதுகாப்புப் படைகளின்பிரதம அதிகாரி ஏயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா மற்றும் கடற்படைத்தளபதி, விமானப்படைத்தளபதி ஆகியோரும் பாதுகாப்பு உயரதிகாரிகளும் அடங்கிய குழுவே யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கே செல்லாதீர் தனது பிரஜைகளுக்கு பிரிட்டன் எச்சரிக்கை

லண்டன், செப். 24

இலங்கையில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் கிழக்குப் பிரதேசத்திற்குச் செல்ல வேண்டாம் என்று பிரிட்டன் தனது பிரஜைகளை எச்சரித்துள்ளது.

அம்பாறை நகருக்கும் அறுகம் குடாவுக்கும் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பிரிட்டிஷ் வெளிவிவகாரத்துறை தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. இணையத் தளம் மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ம)

## கைதான இளைஞர்கள் நீதிமன்றால் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சுற்றாடலில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இளைஞர்க்ள் யாழ்.மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்டார்கள்.

நேற்றுமுன்தினம் மாலை இந்த இளைஞர்கள் 12 பேரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற விசாரணையைத் தொடர்ந்து நீதிபதியின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் மீது குற்றம் எதுவும் சுமத்தப்படாததைத் தொடர்ந்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ம-68)

## பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பாடசாலைக்கு சமூகமளிக்கவும்

### மாணவர்களுக்கு படைத் தலைமையகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.24

தமிழ் மக்கள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை தற்போது தோன்றியுள்ளதால், மேலும் பாடசாலையை பகிஷ்கரிக்காது, நாளையில் இருந்து அனைவரும் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பலாலி பாதுகாப்புத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

கடந்த காலத்தில் வன்முறையாளர்களினால் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிலைமையினால் உங்கள் பிள்ளைகளின் கல்வி தற்காலிகமாக நின்றுபோனது. ஆனால், உங்களின் கல்வியை தொடர்ந்து நிறுத்திக்கொண்டு இருந்தால், உங்களின் எதிர்காலமே இழந்து போய்விடும். தமிழ் மக்களின் அடையாளமான கல்வியினை தொடர்ந்து வன்முறையாளர்களினால் சீரழிப்பதன் ஊடாக உங்களுக்கு ஏற்படப்போகின்ற அவல நிலை பற்றி நாங்கள் மிகவும் வருந்துகின்றோம்.

யாழ். தீவகற்பத்தில் நீங்கள் எதிர்பார்த்த சுமுக நிலை தற்போது தோன்றியுள்ளது. ஆகையால் நீங்கள் தொடர்ந்து பாடசா

(08ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரிலிருந்து முஸ்லிம்கள் மீள நூற்றுக்கணக்கில் இடம்பெயர்வு

### அநாமதேய துண்டுப் பிரசுரத்தை அடுத்து

மூதூர், செப்.24

மூதூரில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மீண்டும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். அங்கு மீண்டும் தாக்குதல்கள் இடம்பெறப் போகின்றன என வெளியிடப்பட்ட அநாமதேயத் துண்டுப்பிரசுரங்களை அடுத்தே அவர்கள் இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

நேற்றும் நேற்றுமுன்தினமும் மட்டும் 700 முதல் 800 வரையான குடும்பங்கள் இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினர் வசம் இருக்கும் அப்பிரதேசத்தை மீண்டும் தாம் கைப்பற்றப் போகிறார்கள் என்று விடுதலைப் புலிகள் குறிப்பிடுவதாக அந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என மூதூரில் உள்ள உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில் மூதூரை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய மோதலைத் தொடர்ந்து அங்கிருந்து பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இடம்பெயர்ந்தனர். அகதி முகாம்களில் தங்கியிருந்த அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னரே தமது சொந்த இடங்களிற்குத் திரும்பியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மூதூரில் இருந்து வெளியேறிய நூற்றுக்கணக்கான குடும்பங்கள், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிண்ணியாவைச் சென்றடைந்தன. (ம)

## தமிழ்க் கூட்டமைப்பினரைத் தொடர்ந்து சங்கரி, சித்தார்த்தனும் இந்தியா பயணம்

புதுடில்லி, செப்.24

இலங்கையில இருந்து மேலும் சில தமிழ் அரசியல்வாதிகள் புதுடில்லிக்கு வருகை தந்து இலங்லக சமாதான முயற்சிகள் மற்றும் வன்செயல் நிலைமை புற்றிக் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர் என்று 'ஐ.ஏ.என்.எஸ்' செய்தி தெரிவிக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த சிறிதரன் ஆகியோர் திங்களன்று இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதிகள் குழு ஒன்றும் புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு பற்றி எழுந்துள்ள எதிர்பார்ப்புகளின் மத்தியில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து தத்தமது நிலைப்பாடுகளை வலியுறுத்த முண்டியடிக்கின்றனர் என்று இந்திய அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று கடந்த பல தினங்களாக இந்தியாவில் தங்கியிருந்து தலைவர்கள் பலருடன் பேச்சு நடத்தியுள்ளது. (ஐ)

## மூதூர் மக்களைத் துன்புறுத்துவதற்கான திட்டமிட்ட சதியே துண்டுப்பிரசுரங்கள்!

### புலிகளுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்கிறார் எழிலன்

திருகோணமலை, செப். 24

மூதூர் மக்களைத் தொடர்ச்சியாகத் துன்புறுத்தும் வகையில் சில சக்திகளின் திட்டமிட்ட செயற்பாடுதான் அங்கு விடுக்கப்படும் அநாமேதய துண்டுப் பிரசுரங்கள். அவற்றுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன்.

மூதூர் மக்கள் குழப்பமடையாமல் தெளிவாக இருக்கவேண்டும் என்று கேட்டிருக்கும் எழிலன் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரசுரங்கள் பற்றியும், மக்களின் அச்சம் குறித்தும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் எங்களோடு பேசியுள்ளனர்.

நான் இது தொடர்பாக அவர்களுக்கு ஒரு தெளிவான விடயத்தைத் தெரியப்படுத்தியிருந்தேன். இந்தத் துண்டுப் பிரசுரங்களிற்கும் எமக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை. இந்தத் துண்டுப் பிரசுரங்களைப் பொறுத்தமட்டில் இடம்பெயர்ந்த அப்பகுதி மக்களைத் துன்புறுத்துவதற்காக அங்கு திட்டமிடப்பட்டு வேறு யாரோ ஒரு பிரிவினரால் ஏற்படுத்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. - ஜே.வி.பி. முறுகல் நேற்று முற்றி வெடித்தது

### சோமவன்ஸவால் கட்சி நாசம் என மைத்திரிபால சாடல்





கொழும்பு, செப்.24

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இடையிலான பிரச்சினை முற்றி வெடித்திருக்கின்றது. சோமவன்ஸ் அமரசிங்க ஜே.வி.பி. கட்சியை நாசம் செய்துவிடுவார் என்று காட்டமாக விமர்சித்திருக்கின்றார் சு.கவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன.

''சோமவன்ஸ நாடு திரும்பியதிலிருந்து ஜே.வி.பி. பலவீனமடைய ஆரம்பித்துவிட்டது.'' - என்று சாடினார் மைத்திரிபால.

உலகின் ''பழைய பாணி''யிலான நடத்தையையே சுதந்திரக் கட்சி பின்பற்றுகின்றது என்று ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கருத்துத் தெரிவித்த சில நாள்களின் பின்னர் மைத்திரிபாலவின் இந்தத் தாக்குதல் வந்துள்ளது.

இது குறித்து சோமவன்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான புதிய செயற்றிட்டத்தை நாம் அரசிடம் கையளித்துள்ளோம். அரசு அதனை

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நிலைமைகள் மோசமடைந்து வருவதனால்

# இலங்கைக்கு சிறப்புத் தூதரை நியமியுங்கள் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் வலியுறுத்து

நியூயோர்க்,செப்.24

இலங்கையில் நிலைமைகள் மோசமடைந்து செல்வதையடுத்து அங்கு அமெரிக்காவின் சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ருஸ் ஹொல்ட் கோரியுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் கொண்டலிஸா ரைஸுக்கு இது தொடர்பாகக் கடிதம் ஒன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் களநிலைமைகள் மிகவும் மோசமடைந்துள்ளதால் அங்கு அமெரிக்க அரசு சார்பில் தூதுவர் ஒருவரை நியமிக்குமாறு வேண்டுகிறேன். 2002ம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் மற்றும் அமைதிப் பேச்சுகள் இந்தக் கோடைகாலம் முதல் முடிவுக்கு வந்துவிட்டன.

இலங்கையில் மீண்டும் வன்முறைகள் அதிகரித்துள்ளன. பலியாவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அமைதி முயற்சிகள் முற்றாகச் சீர்குலைந்து மீண்டும் உள்நாட்டு யுத்தம் உருவாகும் ஏதுநிலை தோன்றியுள்ளது.

அண்மைய மோதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும் 2 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்தும் உள்ளனர். இந்த மோதல்களால் தொடர்புடைய தரப்பினர் மட்டும் பாதிக்கப்படவில்லை. நிவாரணப் பணியாளர்கள் 17பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது விசாரணை அறிக்கையை அண்மையில் வெளியிட்டது.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகளைக் கண்காணிக்க வேண்டியது சர்வதேச சமூகத்தில் அவசரமான பணியாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் அமைதியை உருவாக்குவதில் நமது அரசாங்கத்திற்கு உள்ள ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் இலங்கைக்கான சிறப்புத்தூதுவரின் பெயரை அறிவிக்க வேண்டுகிறோம்.

ஜனாதிபதி புஷ் மற்றும் தங்களுடன் தொடர்புடைய உயர்நிலை அதிகாரி ஒருவரை அமெரிக்க சிறப்புத் தூதுவராக நியமிக்க வேண்டும். நியமிக்கப்படும் சிறப்புத் தூதுவரின் அறிக்கையானது தெளிவானதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பு தொடர்பிலானதாகவும் இருக்கவேண்டும்..

நீண்டகாலம் ஒரு உள்நாட்டு யுத்தத்தை இலங்கை மக்கள் சகித்துக்கொண்டனர். அந்த நாட்டில் மீண்டும் அமைதியை உருவாக்க நாம் நட்டாயம் செயற்படவேண்டும். ஆகையால், அந்நாட்டுக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் - இப்படி அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

## கோப்பாயில் 3 இளைஞர்களை காணவில்லை

கல்வியங்காடு,செப்.24

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 3 இளைஞர்களைக் காணவில்லை என அவர்களது பெற்றோர்களால் யாழ். மனித உரிமை ஆணைக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 20ஆம் திகதி மாலையிலிருந்து இவர்கள் காணாமற்போயுள்ளனர்.

கலைவாணி வீதி, கட்டப்பிராயைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான இராஜேந்திரா பத்மநாதன் (வயது 21), அவரது சகோதரன் இராஜேந்திரா சுரேஸ்குமார் (18), வி.எச்.லேன் இருபாலையைச் சேர்ந்த சாரதியான தர்மகுலசிங்கம் நிசாந்தன் (வயது 21) ஆகியோரையே காணவில்லை என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(ம-79)



பொத்துவிலில் 11 முஸ்லிம்கள் வெட்டிக்கொல்லப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக நாடுமுழுவதுமுள்ள பள்ளிவாசல்களைச் சுற்றி பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மருதானையிலுள்ள பள்ளிவாசல் முன்பாக கலகமடக்கும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## பொத்துவில் சம்பவத்தில் காயமடைந்தவரை கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு,செப்.24

அம்பாறை, பொத்துவிலில் 11 அப்பாவி முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் படுகாயங்களுடன் உயிர்தப்பிய நபரை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுமுன்தினம் சந்தித்தனர். நீண்ட இழுபறிகளின் பின்னர் அவர்களுக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

பொத்துவில் சம்பவத்தில் காயமடைந்தவர் கரீம் மீரா மொகைதீன். அம்பாறை அஷ்ரப் பொது மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்றுவருகின்றார். தொண்டையில் ஏற்பட்ட வெட்டுக்காயத்திற்காக அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. எனினும், பொத்துவில் சம்பவத்திற்குப் புலிகளே காரணம் என்று அவர் வாக்குமூலம் அளித்தார் எனப் பொலீஸார் கூறியிருந்தனர். இதனையடுத்து அவரைச் சந்திக்க கடந்த புதன்கிழமை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முயன்றனர். ஆனால், அனுமதி வழங்கப்படவில்லை.

தொண்டைக் காயத்தால் கதைக்கமுடியாத நிலையில் அவர் இருக்கிறார் எனக் கூறியே அவரைச் சந்திக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குப் பொலீஸார் அனுமதி மறுத்தனர். இதனால் முன்னர் பொலீஸார் தெரிவித்த கருத்துக்கள் குறித்துக் கடும் விமர்சனம் எழுந்தது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மீரா மொகைதீனைச் சந்திக்க கண்காணிப்புக் குழுவினருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தொர்பின்னூர் ஓமர்சன், 'சம்பவம் குறித்து எமது அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னராக அந்த நபரைச் சந்திக்க அனுமதித்ததையிட்டுத் திருப்தியடைகின்றோம்' - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது மீரா மொகைதீன் வாக்குமூலம் அளித்தாரா என்ற விடயத்தைப் பேச்சாளர் வெளியிடவில்லை. (ம)

## மண்டைதீவில் தங்கியுள்ளவர்கள் விறகு எடுத்துவந்துவிற்க அனுமதி

மண்டைதீவு,செப்.24

மண்டைதீவுப் பகுதியில் நிரந்தரமாகத் தங்கியிருப்பவர்கள் அங்கிருந்து விறகு எடுத்துவந்து யாழ். நகரப்பகுதியில் விற்பனை செய்வதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயச் சூழலில் தங்கியுள்ள இவர்கள் தங்களது அன்றாட ஜீவனத்திற்கு வழியின்றிக் கஷ்டமுறுவதையடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவுக்கு வெளியே இடம்பெயர்ந்தவர்களும் 1991ஆம் ஆண்டின் பின் யாழ். நகரப்பகுதிக்கு இடம்பெயர்ந்து நீண்டகாலமாக தங்கியிருப்பவர்களும் தமது சொந்தக்காணிகளுக்குச் சென்று, விறகு, தென்னை மட்டை, காய்ந்த கோம்பை போன்றவற்றை எடுத்துச்செல்ல, முன்பு அனுமதி காலத்துக்கு காலம் வழங்கப்பட்டுவந்தது. அந்த அனுமதி தற்பொழுது பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-88)

## நவம்பர் 14ஆம் திகதி 2ஆவது நிதி நிலை அறிக்கை

மஹிந்த ராஜபக்ஷ அரசு எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி தனது 2ஆவது நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யவுள்ளது.

கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நிதித்துறை பிரதி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய இது தொடர்பில் முன்வைத்த தீர்மானத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 8 வீதமான பொருளாதார வளர்ச்சியை இலக்கு வைத்து இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. நிதிநிலை அறிக்கை மீதான 2ஆம் வாசிப் பானது நவம்பர் 22ஆம் நடைபெறும். டிசெம்பர் 15ஆம் திகதி நிதி நிலை அறிக்கைமீதானவாக்கெடுப்புநடத்தப்படும்.(ம)

## வெல்லக்கட்டியுடன் கடைகளில் தேநீர்

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ். குடாநாட்டு தேநீர் சிற்றுண்டிச் சாலைகளில் சக்கரை, வெல்லக்கட்டியுடன் தேநீர் விற்பனை இடம்பெற்றுவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் சீனியின் விலை அதிகரித்துள்ளமை மற்றும் சீனியைப் பெற்றுக் கொள்வதில் உள்ள கஸ்டங்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. சில தேநீர் சிற்றுண்டி நிலையங்கள் இந்த விற்பனையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முப்பது வருடகாலத்தின் முன்னர் மீண்டும் இந்த நிலைமை யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ளமை சுட்டிக்காட்டக்கூடியதாகும். (ம-68)

## பொருள்கள் உச்ச விலையில்; நவராத்திரி விரதம் சோபை இழப்பு

கல்வியங்காடு,செப்.24

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள பொருள் தட்டுப்பாட்டால் நவராத்திரி பூசையை இம்முறை சிறப்பாகக் கொண்டாட முடியாத இக்கட்டான நிலை யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நவராத்திரி பூசைக்குத் தேவையான முக்கிய பொருள்களான அவல், கடலை என்பன கிடைப்பது பெரும்பாடாக உள்ளது. இருக்கும் இடங்களிலும் அவை 200 ரூபாவுக்கும் அதிகமாகவும் சர்க்கரை 240 ரூபாவாகவும், அரிசி 120 ரூபாவாகவும், தேங்காய் எண்ணெய் 160 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

சில வர்த்தக நிலையங்களில் இப்பொருள்கள் பலமடங்கு அதிகரித்த நிலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கற்பூரம், சாம்பிராணி, பயறு, நெய் போன்ற பொருள்களின் விலைகளும் எகிறிக் காணப்படுகின்றன. இதனால், பெரும்பாலான குடாநாட்டு மக்கள் நவராத்திரி பூசையை கொண்டாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நவராத்திரி பூசையைத் தொடர்ந்து கௌரி விரதமும், கந்தசஷ்டி விரதமும் விரைவில் வர இருப்பதால், தற்போதைய விலையின் அடிப்படையில் மேற்படி விரதங்களை உரிய முறையில் அனுஷ்டிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ம-79)

## அறநெறிப் பாடசாலைகள் தொடர்ந்து இயங்குகின்றன

கல்வியங்காடு,செப்.24

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் ஒவ்வொரு அறநெறிப் பாடசாலைகளிலும் நடத்தப்பட்டுவரும் இலவச பண்ணிசை வகுப்புகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் திங்கட்கிழமை விஜய தசமியன்று நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையிலும், நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலையிலும் இலவச பண்ணிசை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் பழக விரும்புவோர் அந்தந்த அறநெறிப் பாடசாலைகளில் பதிவினை மேற்கொள்ளுமாறு இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் கேட்டுள்ளார்.(ம-79)

## பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு

கல்வியங்காடு,செப்.24

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டபடிப்புகள் பீடத்தில் 2005/2006 கல்வியாண்டுக்கான கற்கை நெறியினை மேற்கொள்ளும் முதுகலைமாணி, நூலக தகவல் விஞ்ஞானம், கல்வியியல் டிப்ளோமா ஆகிய பட்டப்பின் கற்கைநெறி மாணவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை உள்ள காலப்பகுதியில் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் மேற்படி கற்கை நெறிக்குரிய இணைப்பாளரைச் சந்திக்குமாறு பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (ம-79)

## நெல் விலை ரூபா 3,000மாக உயர்வு; தென்மராட்சியில் காலபோகம் பாதிப்பு

தென்மராட்சிகிழக்கு,செப்.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல் 3,000 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளதனால் வன்னிப் பிரதேசத்தில் இருந்து நெல், அரிசி என்பவற்றை எடுத்து வரமுடியாத நிலை உள்ளதால், இந்நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை, காலபோக விதைப்புக்காக ஆயத்தம் செய்யும் விவசாயிகள் விதை நெல்லுக்காக அலைந்து திரியும் நிலை இங்கு காணப்படுகிறது.

தென்மராட்சியில் வரணி, கொடிகாமம் பகுதிகளில் யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் பலர் இடம்பெயர்ந்ததனால் வழமையான பருவமழை பெய்துள்ள நிலையிலும் விவசாயிகள் காலபோக நெற்செய்கையை ஆரம்பிக்கமுடியாத நிலையே காணப்படுகின்றது. இதனால் வரணிப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கில் வயல் நிலங்கள் வெறுமையாக விடப்பட்டுள்ளன. வழமையாக மழையை நம்பி விதைக்கப்படும் புழுதிவிதைப்புக்கூட ஆரம்பிக்கமுடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். மக்கள் இடம்பெயர்ந்துள்ளமையும் கட்டாக்காலி மாடுகள் அவிழ்த்து விடப்பட்டுள்ளமையும் இதற்கான காரணங்கள் எனக் கூறப்படுகின்றது.

மேலும், தேவையான இரசாயன உரங்களைத் தென்னிலங்கையில் இருந்து எடுத்து வர முடியாதநிலையும் உள்ளது. இம்முறை கமத்தொழில் சேவைத் திணைக்களம் வேண்டிய விதைநெல்லை எடுத்துவந்து விநியோகிக்கமுடியாத நிலையும் உள்ளது. இருந்தும் பருவமழையை எதிர்பார்த்து சரசாலை வடக்கு போன்ற வயல் நிலங்களில் விதைப்புக்கான ஆயத்த வேலைகளில் விவசாயிகள் ஈடுபடுவதை காணமுடிகின்றது. (ம-122)

## பல்கலை. வெளிமாவட்ட மாணவருக்கு நிவாரணம் தொடர்ந்து விநியோகம்

கல்வியங்காடு,செப்.24

யாழ். பல்கலைக் கழக வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மூலமாகத் தொடர்ந்து இலவச நிவாரண பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கலைப்பீடம், வணிகமுகாமைத்துவ பீடம், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் என்பன அந்தந்தப் பீடங்களைச் சேர்ந்த வெளிமாவட்ட மாணவர்களுக்கு மா, சீனி, அரிசி, பருப்பு முதலிய அத்தியாவசியமான பொருள்கள் வழங்கப்பட்டுவருகின்றன. அவற்றை இதுவரை பெற்றுக்கொள்ளாத வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களை உடனடியாக வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ம-79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## தரைவழிப்பாதையைத் திறந்து இயல்பு நிலையை ஏற்படுத்துக!

கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்புகளின்போது யாழ்.குடாநாட்டு மக்களின் நிலமை குறித்து விசேடமாக ஆராயப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

குடாநாட்டு மக்கள் இப்போது திறந்த வெளிச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள்போல அல்லாடுகின்றார்கள்.

'மக்களின் பாதுகாப்புக்காக' என்ற பெயரில் பிரகடனப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு வேளையில் - நள்ளிரவில் -அராஜகங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன. வெளியிடங்களுக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டு, குடாநாட்டுக்குள் சிக்கியிருக்கும் மக்கள் அன்றாட, அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டால் பெரும் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் பேரபாயம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் -

யாழ்.குடாநாடு உட்பட அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக அதிகரித்துவரும் ஆள்கடத்தல்கள், படுகொலைகள் போன்ற வன்முறைகள் குறித்தும், மூடப்பட்டிருக்கும் 'ஏ-9' நெடுஞ்சாலையை முகமாலையிலும் ஓமந்தையிலும் மீளத்திறந்து மக்களின் அவலங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் நோர்வேத் தூதுவரும் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் விரிவாகக் கலந்துரையாடினர் எனத் தெரிகின்றது.

'ஏ-9' பாதையைத் திறப்பது என்பது அரசுக்கும் அதன் படைகளுக்கும் இராணுவத் தந்திரோபாய அடிப்படையில் அவற்றின் கவனத்துக்கும், சிரத்தைக்கும், பரிசீலனைக்கும் உரிய விடயமாக இருக்கலாம்.

ஆனால், அது யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அரசுக்கு நிறைவேற்றக் கடப்பாடும், பொறுப்பும் சுமத்தப்பட்ட விடயமாகும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான முதனிலை நடவடிக்கைகளில் முக்கியமானது இந்தப் பாதையைத் திறப்பதாகும்.

அதைச் செய்ய மறுப்பது -அல்லது அந்த நடவடிக்கைக்கு இணங்க மறுப்பது - யுத்தநிறுத்த மீறல் மட்டுமின்றி, இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கு முட்டுக்கட்டை போடும் விவகாரமுமாகும்.

இந்தப் பாதையைத் திறக்கவேண்டியதன் அவசியத்தை- அதற்கான காரண காரியங்களை- விளக்கமாகவும், விஸ்தாரமாகவும் விவரித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றார் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

அரசியல் நோக்கங்கள், இராணுவ மூலோபாயங்கள் ஆகியவற்றுக்கு அப்பால் ஐந்தரை லட்சம் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையின் அடிப்படையில் அணுகப்படவேண்டிய விவகாரம் இது என்பதை காரண, காரியங்கள் மற்றும் புள்ளிவிவரத் தகவல்களோடு முன்வைத்திருக்கின்றார் யாழ்.ஆயர்.

அத்தோடு, இப்பாதையைத் திறப்பதன் மூலம் தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்விச் பிரச்சினைக்கும் சுமுகத் தீர்வு காணக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

யாழ்.குடாநாட்டு மக்களை பேரவலத்துக்குள் தொடர்ந்து ஆழ்த்தும் வகையில் திறந்த சிறைச்சாலையில் அவர்கள் சிக்கியிருக்கும் இந்தநிலையில் நீடித்துக்கொண்டு -

யுத்தநிறுத்த உடன்பாட்டு இணக்கப்படி நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டை பூர்த்திசெய்யாமல் மறுத்துக்கொண்டு -

நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்துவது குறித்து அரசும் புலிகளும் ஒஸ்லோவில் போயிருந்து பேசுவதில் அர்த்தமில்லை.

இதையே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் நோர்வேத் தூதருக்கு எடுத்துரைத்தார் எனத் தெரிகின்றது.

* தமிழர் தாயகத்தில் - குறிப்பாக அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் - ஒன்று மறியா அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக வகை, தொகையின்றி புரியப்படும் வன்முறைகள், படுகொலைகள், ஆள்கடத்தல்கள், ஆள்கள் காணாமல் போதல் போன்ற கிரிமினல் நடவடிக்கைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள்.
* 'ஏ-9' பாதையைத் திறந்து இயல்பு நிலையை ஏற்படுத்த வழி செய்யுங்கள்.

இந்த இரண்டு அடிப்படை விடயங்களையும் நிறைவேற்றிய பின்னர் ஒஸ்லோவுக்கு போகலாம் என்று தமிழ்ச்செல்வன் எடுத்துரைத்தார் எனத் தெரிகின்றது.

ஹவானா, அமெரிக்கா என்று சர்வதேச மாநாடுகள் நடைபெறும் இடங்களில் போயிருந்துகொண்டு, அமைதி வழித் தீர்வுக்கும் தாம் தயார் என்று கௌதம புத்தர் போன்று 'ஞான உபதேசம்' செய்கிறார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

விடயங்கள், உபதேசங்கள் சொல்லில் மட்டும் இருப்பதில் அர்த்தமில்லை. செயலிலும் அவை செய்து காட்டப்பட வேண்டும்.

இவ்வளவு முரண்பாடுகள், பகையுறவு, விரோதம், குரோதம், நம்பிக்கையீனம் ஆகியவற்றின் பின்னரும் தமிழர்களாலும் சிங்களவர்களாலும் அமைதி வழியில் பேசி தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்று ஜனாதிபதி மஹிந்த தமது வாயால் உரைக்கும் விடயத்தை மனதாரவும் கொண்டிருப்பாரேயானால் -

அதை செயல் வடிவில் அவர் வெளிப்படுத்துவது தான் பொருத்தம். வாய் வழி 'நல்லுபதேசங்களை' விடுத்து.

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் அராஜகங்கள், அட்டூழியங்களை நிறுத்தச் செய்து, தரை வழிப்பாதையைத் திறப்பது அத்தகைய வெளிப்படுத்துகையாக அமையும். அதை அவர் செய்வாரா?

# தமிழ்-முஸ்லிம் மக்கள் படுகொலை குறித்து பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்

## கொழும்பு பேராயர் கோரிக்கை

கொழும்பு,செப்.24

வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் மக்கள் படுகொலை குறித்து பக்கச் சார்பற்ற சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இலங்கைத் திருச்சபையின் பேராயர் டுலிப் டி சிக்கேரா கோரியுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொத்துவிலுக்கு அருகிலுள்ள பணாம என்ற இடத்தில் நடைபெற்ற பத்து முஸ்லிம் மக்களின் படுகொலைச் செய்தி தேசத்தின் மக்களை அதிர்ச்சியடையச் வைத்துள்ளது. இக்கொடூரமான செயல் கண்டிக்கப்பட வேண்டியது. சமாதானமாக வாழ விரும்புகின்ற சமூகத்தின் வேதனையை அதிகரிக்கச் செய்கின்றதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற முரண்பாடுகளையும் அழிவுகளையும் மென்மேலும் அதிகரிக்கச் செய்கின்ற ஒரு செயலாக இது காணப்படுகின்றது.

நடுத்தரமானதும் பக்கச்சார்பற்ற வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையரில் இருந்து எல்லாச் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு குழுவானது இப்படுகொலைகள் சம்பந்தமாக பக்கச் சார்பற்ற சுதந்திரமான ஒரு விசாரணையை நடத்தும்படி அழைக்கப்பட வேண்டும் என்ற அழைப்பை மீண்டும் வலியுறுத்துகின்றேன். இந்த விசாரணைகள் குறித்து விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுக்கள் தங்களது செயற்பாடுகளை சீக்கிரத்தில் நிறைவேற்றுவார்கள் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படாமை குறித்தும் அதனால் சமூகத்திற்கு உண் டான ஏமாற்றத்தைக் குறித்தும் எனது ஆழ்ந்த மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 தன்னார்வத் தொண்டர்களின் மரணம் குறித்த சர்வதேச விசாரணைகள் இப்போது நடைபெறாமல் போகலாம் எனத் தெரியவருகின்றது. திருகோணமலையில் கொலை செய்யப்பட்ட 5 பல்கலைக்கழக மாணவர்களினதும் பேசாலை, அல்லைப்பிட்டி போன்ற இடங்களில் நடைபெற்ற படுகொலைகள் நீதிக்கு முன் கொண்டுவரப்படுவதில் ஏற்படும் தாமதம் குறித்தும் எனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நீதியையும் சமாதானத்தையும் விரும்பும் வெளிப்படையான, சனநாயக சமூகத்தின் பெயரிலும் நீண்ட காலமாகத் துன்பியலுக்கு ஊடாக செல்லுகின்ற மக்களின் பெயரிலும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நீதியையும் சமாதானத்தையும் செயல்படுத்துவதற்கு இப்படுகொலைகள் சம்பந்தமான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இலங்கைத் திருச்சபையின் சார்பாக பொத்துவில் பகுதியில் வாழுகின்ற தங்கள் உறவினர்களை இழந்து ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கி இருக்கும் குடும்பங்களுக்கும் பொத்துவில் பகுதியில் வாழ்கின்ற முஸ்லிம் சமூதாயத்திற்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்- என்றுள்ளது. (1-203)

## ரொறன்ரோவில் தமிழ் இளைஞர் கத்தியால் குத்திப் படுகொலை

வடமராட்சி,செப்.24

வடமராட்சி, குடத்தனை, அம்பன் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கனடாவிலுள்ள ரொறென்ரோ நகரில் வைத்து இனந்தெரியாதோரால் வழிமறித்து கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி காலையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் தர்மகுலசிங்கம் பிரதீப்(வயது 25) என்ற இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனது பெற்றோருடன் 5 வயதில் கனடாவில் குடியேறிய இவர் சம்பவ தினத்தன்று தனது காரில் வேலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாதோரால் வழிமறிக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து உறவினருக்குக் கிடைத்த தகவலில் தெரிவிக்கப்பட்டது. (173)

## வயோதிபர், நோயாளிகளுக்கு படையினர் சலுகை

உடுப்பிட்டி,செப்.24

போக்குவரத்துச்சேவை வாகனங்களில் பயணம் செய்யும் வயோதிபர்களுக்கும் நோயாளர்களுக்கும் பாதுகாப்புபடையினர் முன்னுரிமை வழங்குகின்றனர்.

தற்போது யாழ்.பருத்தித்துறை போக்குவரத்து வாகனங்கள் பல இடங்களில் பொதுமக்களை பாதுகாப்புச் சோதனைக்காக இறக்கி ஏற்றிய போதும் வயோதிபர்கள், நோயாளர்கள் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களை இறக்காமல் வாகனங்களில் வைத்தே சோதனை செய்கின்றனர். (ப-155)

## கடற்றொழிலுக்குச் சென்ற இருவரை காணவில்லையென்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.24

கடந்த மாதம் 11 ஆம் திகதி மண்டைதீவில் இருந்து தொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர்கள் இருவர்43 நாள்கள் கடந்த நிலையிலும் வீடு திரும்பவில்லையென்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜோன்பிள்ளை அருள்தாஸ் (வயது 30), கிறிஸ்தோப்பர்அன்ரனி பிரான்சிஸ்(வயது 36) ஆகிய இருவருமே கடலுக்குச் சென்று வீடு திரும்பவில்லையென்று முறையிடப்பட்டுள்ளது.

இவர்கள் கடற்றொழிலுக்குச் சென்ற பின்னர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும்-அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் எனத் தெரியாது எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

## சிட்டையில் உள்ளபடி சரிபார்த்து பொருள்களை கொள்வனவு செய்க!

### கூட்டுறவுக் கிளைகளில் அறிவுறுத்தல் பலகை

அரியாலை,செப்.24

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ளும் அத்தியாவசியப் பொருள்களை சிட்டையின்படி சரிபார்த்து அவதானமாக பெற்றுச்செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல் விளம்பரங்கள் சகல சங்கக் கிளைகளிலும் தொங்கவிடப்பட்டுள்ளன.

பொருள்களின் நிறை, தரம், அளவு போன்றவற்றை சிட்டையின் படி சரிபார்த்து பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் - கூட்டுறவுக் கடைகள் ஊடக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வரும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகப் பணிகளை கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் மேற்பார்வையைச் செய்து வருகின்றனர். (17)

## நவராத்திரி விழா

கல்வியங்காடு,செப்.24

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக் களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் நவராத்திரி விழா வலிகாமம் பிரதேசத்தில் உள்ள அறநெறிப் பாடசாலைகளில் நடைபெற்றுவருகிறது.

சாவற்கட்டு அறநெறிப் பாடசாலை, மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, இளவாலை ஒல்லுடை ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, மாதகல் சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை, வட்லியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப்பாடசாலை என்பவற்றில் நவராத்திரி விழா வெகுசிறப்பாக அந்தந்த அறநெறிப் பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அந்தந்த அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. (ம-79)

## குடாநாட்டு நிலைவரத்தை வெளிக்கொண்டுவர மக்கள் குழு

யாழ்ப்பாணம்,செப்.24

குடாநாட்டு மக்களின் தற்போதைய உண்மை நிலைமையை வெளிக்கொண்டுவரும் வகையில் மக்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக பேராசிரியர் க.சிற்றம்பலமும் செயலாளராக க.குலநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பல்கலைக் கழக பேராசிரியர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.குடாநாட்டில் தற்போது இடம் பெற்றுவரும் கொலைகள், கைதுகள், காணாமல் போதல் மற்றும் கடத்தல் போன்றன சம்பந்தமாக இந்தக்குழு கூடிய கவனம் எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (68)

## வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் மரணம்

உடுப்பிட்டி,செப்.24

அல்வாய் தெற்கு, ஓடைப்பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் வாள்வெட்டுக்கு இலக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலையில் இடம்பெற்ற மோதலில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னர் கிட்டுணன் (வயது 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் மரண விசாரணையை மேற்கொண்டதையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (202-155-173)

## கப்பலுக்காக தவம் கிடக்கும் பொதுமக்கள்

தென்பகுதிக்கு செல்வதற்காக யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்றும் காத்திருந்தார்கள். எந்தவகையான முன்னறிவித்தல்களும் இன்றி சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நேற்றுமுன்தினம் கப்பலில் செல்வதற்காக முண்டியடித்தனர். எனினும் சுமார் தொளாயிரம் பேர் வரையிலானோர் மட்டுமே கப்பலில் அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

நேற்றுமுன்தினம் மாலை வரை காத்திருந்தும் கப்பலில் இடம் கிடைக்காதவர்களில் ஒரு பகுதியினர் தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்லாது அருகில் உள்ள தேவாலயத்தில் தமது இரவைக் கழித்துவிட்டு மீண்டும் நேற்றுக்காலைமுதல் கப்பலுக்காக சிங்கள மகாவித்தியாலயத்தில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அடுத்தகப்பல் எப்போது புறப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படாத நிலையில் பொதுமக்கள் தொடர்ந்தும் காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயப் பகுதிக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.21

நவாலி வடக்கு பெத்தநாச்சியார்அம்மன் ஆலயப் பகுதிக்கு மின்சார இணைப்பு வழங்க மானிப்பாய் பிரதேச சபை முன்வர வேண்டும் என்று நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகர்த்த சனசமூக நிலையம் வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் மே. சத் தியசீலனைக் கடி தம் மூலம் கோரி யுள்ளது.

நவாலி வடக்கு பெத்த நாச்சியார் ஆலயப் பகுதி கடந்த 50வருடங்களுக்கு மேலாக மின்சார இணைப்பு இன்றி இருளில் மூழ்கியுள்ளது.

இதனால் அப்பகுதியிலுள்ள அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், பலரும் சிரமமடைகின்றனர். (ப-95)






# டோஹா - கட்டார் சுத்திகரிப்பாளர்கள்

டோஹா கட்டாரில் கீழ் கண்ட வேலைவாய்ப்புகள் உண்டு. உடனடியாக வரவும்.

| தொழில் | தொகை | சம்பளம் |
|---|---|---|
| சுத்திகரிப்பாளர்கள் [CLEANERS] | 50 | ரூ.20,000 |

**வேலைவாய்ப்பிற்கான நிபந்தனைகள்**

- உணவிற்கான கட்டணம் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது
- தங்குமிடவசதி, மருத்துவம், காப்புறுதி வசதி இலவசம்
- வேலை நேரம் 8 மணித்தியாலப்படி 6 நாட்கள்
- மேலதிக கொடுப்பனவு உண்டு
- ஒப்பந்தக்காலம் 2 வருடங்கள்
- வருவதற்கும் செல்வதற்கும் விமான டிக்கட் வழங்கப்படும்.

கிழமை நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிக்கிடையில், சனிக்கிழமைகளில் காலை 9 மணியிலிருந்து பகல் 1 மணி வரை கடவுச்சீட்டுடன் நேரில் வரவும்.

**HEWAS ASSOCIATES (PVT) LTD**
No. 05, Pickerings Road, Colombo 13.
(Hettiyawaththa Junction)
License. No : 750 App: NO: AL/ 750/ Advt/ 08/ 06

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மறைவு
11 - 08 - 2006



தோற்றம் 08.09.1954
அமரர்
**சிதம்பரநாதர் காராளகுலசிங்கம்**

தோற்றம் 14.04.1955
அமரர்
**காராளகுலசிங்கம் தவயோகநாயகி**

கடந்த 11.08.2006 அன்று அமரத்துவம் அடைந்த எமது குல தெய்வங்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் நாளை (25.09.2006) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் இடைக்குறிச்சி, வரணி முருகுப்பிள்ளையின் இல்லத்தில் இடம்பெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பிள்ளைகள்:
கா.சயந்தன்(மகன்),
கா.சயந்தினி(மகள்),
கா.பிரீதினி(மகள்).

இடைக்குறிச்சி,
வரணி.

# ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டில்

இன்பத்தின் நிறைவாய் 04 - 08 - 1984



துயரத்தின் இமயமாய் 07 - 10 - 2005

திதி: சதுர்த்தி 26.09.2006

## செல்வி தனுஷா மாதவராஜா

[2ஆம் வருட கலைப்பீட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்,
பழைய மாணவி-மகளிர் மகா வித்தியாலயம்,
இறம்பைக்குளம்,வவுனியா.]

தூண்டாமணி விளக்கே! சுடர் ஒளியே!
நீ பிரிந்தே
ஆண்டொன்று ஆனதுவே
நீ பிரிந்த காரணத்தால்
ஈன்டு துயர்க்கடலில்
இன்றும் துடிக்கின்றோம்!

என்றும் மீளாத் துயருடன்
பெற்றோர், தம்பி, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அம்மம்மா, உடன்பிறவாத தங்கை மற்றும் உற்றார், உறவினர்கள்.

பொன்னையா மாதவராஜா,
அண்ணாவி வளவு,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

## Save the Children in Sri Lanka



**Save the Children in Sri Lanka [SCiSL]** is an International Non Governmental Organisation, which is part of the International Save the Children Alliance, the world's largest independent movement for children working in 120 countries. For the past 30 years, SCiSL has been an advocate for children's rights and has worked hard to make real and lasting improvements in the lives of all Sri Lankan children irrespective of nationality, race or religion.

**We are looking for a committed, creative and energetic individual to join our team as a:**

# DEPUTY DISTRICT MANAGER

The main function of this post is to manage at the district level, the Programmes of SCiSL, including Finance, Logistics, Human Resources and Administration in the designated area in Sri Lanka. **This is a senior position and potential candidates are expected to have substantial managerial experience. Only Sri Lankan citizens are eligible to apply for this position.**

**Please note that it is absolutely essential that the incumbent of this position remains at the specified base station, even during non-working days and holidays.**

**Base Station** : Kilinochchi
**Indicative Remuneration** : Approximately Rs. 70,000 /=
**[Salary will be negotiable for those candidates with higher skills and experience]**

**Essential Qualifications and Experience:**

- Graduate degree [preferably Post-Graduate] in Social Sciences or equivalent
- At least 5 years experience in Programme Management. Experience must include project planning, monitoring & evaluation, staff supervision and support.
- Experience in preparation and monitoring of budgets, grant management including budget holding and donor reporting.
- Ability to produce successful project proposals and high quality reports.
- Good interpersonal and communication skills, with fluency in written and spoken English, Tamil and/or Sinhala.
- Computer literacy, representational and advocacy skills, including proven experience in managing teams of professional staff.
- Ability and willingness to travel to all parts of the country.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Please ensure that the names of two non-related referees are provided.

Applications together with an approx. 300 word essay on how your previous work experience will assist in fulfilling the requirements of the above post, should be submitted to:

**Save the Children in Sri Lanka**
**Human Resources Unit**
**58A, Horton Place, Colombo 7**

**Closing Date: 03rd October 2006**

Only applicants selected for the interview will be contacted.
No telephone enquiries please.

ICA

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in 120 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on a) **Child Protection,** (b) **Education,** (c) **Household Economic Security** and (d) **Child Rights.** Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

Protecting Rights - Promoting Responsibilities

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவில் மீளக் குடியமர படையினர் புதிய நிபந்தனை

மண்டைதீவு.செப்.24

அசாதாரண சூழ்நிலை காரணமாக மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்தோர் மீளக்குமர்வதற்கு கடற்படையினர் புதிய நிபந்தனை விதித்திருப்பதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமர விரும்புவோர் தாம் இடம் பெயர்ந்து வசித்த இடம் எந்த பொலிஸ்பிரிவிற்கு உட்பட்டதோ அந்த பொலிஸ்நிலையத்தில் நற்சான்றிதழ் பேற்றுவரவேண்டும் என்றும்-

அந்த நற்சான்றிதழில் ''குறிப்பிட்ட நபர் அல்லது குடும்பம் வன்செயலுடனோ அதனோடு சம்பந்தப்பட்டவர்களுடனோ தொடர்புபட்டவர்கள் அல்ல'' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும் கடற்படையினர் வலியுறுத்திக் கூறிவருகின்றனராம். இதனால், மண்டைதீவில் மீளக்குடியமரச் செல்வோர் பெரும்நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களுள் கணிசமானவர்கள் மீண்டும் அங்கு குடியமர கடற்படையினரிடம் விருப்பம் தெரிவித்த பொழுதே அவ்வாறு நிபந்தனை விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. குருநகர், பாஷையூர் பகுதி கடற்தொழிலாளர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதால், தமக்கும் தொழில்செய்ய வசதி ஏற்படும் என்ற நம்பிக்கையில் மண்டைதீவு தொழிலாளர்கள் மீளக்குடியமர விருப்பம் தெரிவித்துள்ளனர். மேலும் இவர்களது தொழில் உபகரணங்கள் இரண்டு மாதகாலமாக கடலில் விடப்பட்டுள்ளன.

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் விவசாய வேலைகளில் ஈடுபட விவசாயிகளும் ஆர்வமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ப-88)

# வலி .கிழக்கு பகுதி விவசாயிகள் மரவள்ளிச் செய்கையில் தீவிரம்

அரியாலை.செப்.24

வலிகிழக்கு பகுதி விவசர்யிகள் மரவள்ளி மற்றும் இராசவள்ளி கிழங்கு செய்கையில் அதிக ஆர்வம் காட்டத்தொடங்கியுள்ளனர்.

குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை மற்றும் உணவுப்பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டின் காரணமாகவே விவசாயிகள் மரவள்ளி செய்கையை மேற்கொள்வதில் ஈடுபட்டு வருகின்றனா.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பிராய், ஆவரங்கால், ஊரெழு, அச்சுவேலி, நவக்கிரி போன்ற பகுதி விவசாயிகள் தமது தோட்டங்களை சீர்படுத்தி இவைகளை பயிர்செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேசமயம் குடாநாட்டு சந்தைகளில் தற்போது மரவள்ளிக்கிழங்கு கிலோ 20 ரூபா முதல் 30 ரூபாவரை விற்கப்படுகின்றது.

(ப-17)

# வன்னிமாவட்ட நோயாளர்கள் தொடர்ந்தும் யாழ். ஆஸ்பத்திரியில்

நல்லூர்.செப்.24

யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்ற வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச்ச செல்லமுடியாத நிலையில் யாழ்.வைத்தியசாலையிலேயே தங்கியுள்ளனர்.

இவர்களை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே.கணேஸ் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் அவர்களது போக்குவரத்து தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுமென அப்போது தெரிவிக்கப்பட்டது எனவும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.எ.ஞானஜோதி தெரிவித்தார்.

நோயாளர்களுடன் தங்கியுள்ள உதவியாளர்களுக்கு உணவுப்பிரச்சினை இருப்பதாகவும் அது குறித்தும் அரச அதிபர் மற்றும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு அவர்களின் உணவுப் பிரச்சினைக்கு உதவும்படி கேட்டிருப்பதாகவும் பணிப்பாளர் ஞானஜோதி கூறினார். (ப-111)

## தற்காலிக சந்தையாக மாறி வருகின்றது யாழ். சத்திரச் சந்தி

யாழ். சத்திரச் சந்தி பகுதி தற்காலிக சந்தையாக மாறிவருகின்றது.

மீன் - இறைச்சி தவிர்ந்த ஏனைய மரக்கறி வகைகள், பழவகைகள், தேங்காய்கள், கோழிகள் என்பன விற்பனை செய்யும் இடமாக மாறியுள்ளது.

தீவகப்பகுதியில் இருந்து கொண்டுவரப்படும் பொருட்கள் இறக்கப்பட்டவுடன் விற்பனைக்கு தயாராகின்றன. அதேபோல சத்திரச்சந்தியில் கூடுவோரும் அப்பொருட்களை அங்கிருந்து பெற்றுச்செல்வதனை காணக்கூடியதாக உள்ளது.

(ப-95)

## நிவாரணப் பொருள்கள் நிறை குறைவு

உடுப்பிட்டி.செப்.23

நிவாரணப்பொருள்கள் நிறைகுறைந்துள்ளதாகவும் சில அத்தியாவசியப் பொருள்கள் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கவில்லை எனவும் குறைகூறப்படுகின்றது.

கரவெட்டிப்பிரதேசதிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சில கிளைகளில் தற்போது வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களின் நிறைகள் குறைவாக உள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உதவியாளர்களுக்குப் பதிலாக கிளைகளுக்கு அண்மையில் உள்ளவர் மற்றும் தெரிந்தவர்களைப் பயன்படுத்துவதும் மேற்படி சீர்குலைவதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக அதிகாரிகள் கவனம் செலுத்தி உதவவேண்டுமென மக்கள் தரப்பில் கோரப்படுகிறது.

(ப-155)

# மாதகல் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க விவசாயிகள் கோருகிறார்கள்

### காலபோக நெற்செய்கை பாதிக்கப்படும் எனச் சுட்டிக்காட்டு

வலிதென் மேற்கு.செப்.24

மாதகல் பாணாவெட்டி மற்றும் சுளானை ஆகிய பகுதிகளில் ''ஹலோ றெஸ்ற்'' நிறுவனம் மேற்கொண்டு வந்த மிதிவெடி அகற்றும் பணி கடந்த ஒருமாதகாலமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பணியை மீண்டும் ஆரம்பிக்கும்படி தற்பொழுது விவசாயிகள் சம்மேளனம் கோரியுள்ளனர். 1992 ஆம் ஆண்டுப் பகுதியில் இங்கு ஏற்பட்ட போர் அனர்த்தங்களின் போது புதைக்கப்பட்ட இந்த மிதிவெடிகளை அகற்றி தருமாறு மாதகல் பகுதியிலுள்ள பொது நல நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் விடுத்திருந்த வேண்டுகோளை அடுத்து ''ஹலோ றெஸ்ற்'' நிறுவனத்தினால் இப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து கடந்த ஒரு மாதகாலமாக இப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மிதிவெடி அபாயம் இருந்து வருவதால் தொடர்ந்தும் அவைகளை அகற்றும் பணி நடைபெற வேண்டும் என்று மாதகல் விவசாயிகள் சம்மேளனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. சுற்றாடலிலும் மிதிவெடி அபாயம் இருந்து வருவதால் சுமார் 500 பரப்பு நெற்காணிகளில் இம்முறையும் காலபோக நெல்விதைப்பு மேற்கொள்ள முடியாதுள்ளதாக மாதகல் விவசாயிகள் சம்மேளனத் தலைவர் வி.சிற்றம்பலம் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

(ப-135)

# விளையாட்டு மைதானத்துக்குச் சென்ற மூவர் வீடு திரும்பவில்லையென்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.24

விளையாட்டு மைதானத்திற்குச் சென்ற மூன்று இளைஞர்கள் வீடு திரும்பவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் தமது வீடுகளில் இருந்து இந்த 3 இளைஞர்களும் விளையாட்டு மைதானத்திற்குச் சென்றுள்ளதாவும் -

பின்னர் இவர்கள் வீடு திரும்ப வில்லை என்றும் -

கடந்த வியாழனன்று மனித உரிமைகள் ஆணைக்குழவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இருபாலை கட்டைப்பிராய் கலை மணி வீதியைச் சேர்ந்த இராஜேந்திரா சுரேஷ்குமார் (வயது - 18), இராஜேந்திரன் பத்தநாதன் (வயது - 21) வி.எச். வீதி இருபாலையைச் சேர்ந்த சாரதியான தர்மகுலசிங்கம் நிசாந்தன் (வயது - 21) ஆகியோரே காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (68)

# மண்டைதீவில் தங்கியுள்ளவர்கள் விறகு எடுத்துவந்து விற்க அனுமதி

மண்டைதீவு.செப்.24

மண்டைதீவுப்பகுதியில் இடம்பெயராது தங்கி இருப்பவர்கள் அங்கிருந்து விறகு எடுத்து வந்து யாழ் நகரப்பகுதியில் விற்பனை செய்வதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயச் சூழலில் தங்கியுள்ள இவர்கள் தங்களது அன்றாட ஜீவனத்திற்கு வழியின்றி கஷ்டமுறுவதைக் கண்டறிந்த அந்தப்பகுதிகான கடற்படைக் கட்டளையதிகாரி இந்தத் தற்காலிக அனுமதியைக் கொடுத்துள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

மண்டைதீவுக்கு வெளியே இடம்பெயர்ந்தவர்களும் 1991ஆம் ஆண்டின் பின் யாழ்.நகரப்பகுதிக்கு இடம்பெயர்ந்து நீண்டகாலமாக தங்கியிருப்பவர்களும் தமது சொந்தக் காணிகளுக்கு சென்று விறகு, தென்னம்மட்டை, காய்ந்த கோம்பை என்பவற்றை எடுத்துச்செல்ல, முன்பு காலத்துக்கு காலம் அனுமதி வழங்கப்பட்டு வந்தது. அந்த அனுமதி தற்பொழுது பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

(ப-88)

## நிவாரண மீன்ரின் தனியார் கடைகளில்

உடுப்பிட்டி.செப்.23

நிவாரணத்திற்கு வழங்கப்படும் மீன்ரின்கள் தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கென பலநோக்குச் கூட்டுறவுச்சங்கங்கள் .மூலம் வழங்கப்பட்டுவரும் மீன்ரின்கள் தனியார் கடைகளில் ரூபா 60/= விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ப-155)

## புங்குடுந்தீவு தேவாலயத்தில் நாட்டின் அமைதிக்காக 26ஆம் திகதி வழிபாடு

யாழ்ப்பாணம்.செப்.24

நாட்டில் நீதியான, சமத்துவமான நிரந்தர சமாதானம் வேண்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

நாட்டின் அவலநிலை நீங்கிட மக்கள் பசி, பிணி, பயமின்றி வாழ்ந்திட நாட்டிற்கு நிரந்தர சமாதானம் வேண்டி இந்த வழிபாட்டில் ஒன்றுகூடி வேண்டுதல் செய்ய அனைவரையும் அந்தோனியார் ஆலயத்தினர் அழைத்துள்ளனர்.

(ப-203)

## பாடசாலைக்குரிய மோட்டார் குழாய்கள் திருட்டு

சங்கானை.செப்.24

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பாவனையில் இருந்த மோட்டார் இயந்திரம் மற்றும் அதனோடு சேர்ந்த தண்ணீர்க்குழாய்கள் கடந்த 19 ஆம் திகதி இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றி மானிப்பாய் பொலிஸில் பாடசாலை அதிபரினால் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் உட்பட பாடசாலை சமூகத்தினர் இதனால் தண்ணீர் பெறமுடியாமல் பெரும் அவஸ்த்தைக்குள்ளாகியுள்ளனர். இத்திருட்டுச்சம்பவம் ஊரடங்கு வேளையில் இடம் பெற்றனவாகக் கூறப்படுகின்றது. (ப்-155)

# மஹிந்தவை அமெரிக்காவில் சந்திக்க மறுத்தார் சந்திரிகா



கொழும்பு.செப்.24

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அமெரிக்காவில் வைத்துச் சந்திப்பதற்காக விடுத்த வேண்டுகோளை முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க நிராகரித்துவிட்டார் எனத் தெரியவகின்றது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் தங்கியிருந் தார். அதேவேளை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் சமூக சேவைகள் மன்ற நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் நியூயோர்க் சென்றிருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், முன்னாள் ஜனாதிபதியையும் நேருக்கு நேர் சந்திக்கவைப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் பிரபல தொழில திபர் ஹரிஜயவர்த்தன ஆகியோர் தீவிர முயற்சிகளை மேற் கொண்டனர். இதற்காக விடுக்கப்பட்ட வேண்டு கோளை முன்னாள் ஜனாதிபதி முற்றுமுழு தாக நிராகரித்து விட்டாரெனத் தெரிவிக்கப் படுகின்றது. தற்போதைய ஜனாதிபதியுடன் நேரடிச் சந்திப்பை நடத்தத்தாம் விரும்பவில் லையென்று முன்னாள் ஜனாதிபதி வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரி வித்துவிட்டார் என்று அறியவந்தது.



**நேற்றையஉதயன் இரண்டாம் பக்கத்தில் இதே தலைப்புடன்அதற்குரியபொருளடக்கத்துக்குப் பதிலாக மற்றொரு பொருளடக்கத்துடன் பிழையாகவெளி வந்து விட்டது. கணணித்தொழில் நுட்பச் கோளாறு காரணமாக ஏற்பட்ட இத்தவறுக்கு வருந்துகின்றோம்.**

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றுண்டிச் சாலைகளில் உணவுப் பொருள் கொள்வனவுக்கு யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு

## முதற்கட்டமாக 12 நிலையங்களுக்கு அனுமதி

யாழ். நகரில் உள்ள 12 உணவுச்சாலைகளுக்கு கோதுமை மா, அரிசி, சீனி ஆகிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கான கடிதங்களை யாழ். வணிகர் கழகம் நேற்று சனிக்கிழமை வழங்கியது.

நகரில் உள்ள உணவு நிலையங்கள் தமக்குத் தேவையான அரிசி, கோதுமை மா, சீனி போன்ற அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் அனேகமான உணவு நிலையங்கள் மூடப்பட்டுள்ளமை தெரிந்ததே.

உணவு நிலையங்களின் நிலைமை குறித்து யாழ். வணிகர் கழகம் அரச அதிபருடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து யாழ். ப.நோ. கூ. சங்கத்தின் ஊடாக மேற்படி பொருள்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இதன்படி, தற்சமயம் கிடைக்கப்பெற்ற அனுமதிக்கமைய 12 உணவு நிலையங்களுக்கு 12 மூடை கோதுமை மா, 10 மூடை சீனி, 21 மூடை அரிசி, 25 கிலோ உள்ளடங்கிய 10 மூடை பருப்பு என்பன வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாத் தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பொருள்களைப் பெற உதவுமாறு 60 இற்கும் அதிகமான உணவு நிலையங்கள் வணிகர் கழகத்திடம் விண்ணப்பித்தபோதும் தற்சமயம் 12 உணவகங்களுக்கே பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (111)

# மூன்று ஆஸ்பத்திரிகளுக்கு பொறுப்பதிகாரி ஒருவர்

யாழ்ப்பாணம்,செப்.24

தீவகத்தில் உள்ள மூன்று வைத்தியசாலைகளுக்கு பொறுப்பதிகாரியாக வைத்திய அதிகாரி டாக்டர் அ. திருநாவுக்கரவு நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தியாவசிய சேவைகளின் கீழ் மேற்படி நியமனத்தை மாகாண சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் வழங்கியுள்ளார்.

வேலணை அரசினர் வைத்தியசாலையை நிரந்தரமாகவும் அல்லைப்பிட்டி, மண்டைதீவு வைத்தியசாலைகளுக்கு தற்காலிகமாகவும் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# 57 வயதுக்கு மேற்பட்ட அரச அலுவலரின் விவரம் மாகாண சபையினால் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க திணைக்களங்களில் ஐம்பத்தேழு வயதுக்கு மேற்பட்ட வயதுகளில் கடமையாற்றும் அலுவலர்களின் விவரம் திரட்டப்படவுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு மாகாண பிரதம செயலாளர் ஊடாக மேற்படி விவரங்களைத் திரட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

மாகாண அரச திணைக்களங்களில் தேவைக்கு அதிகமாகவும், மேலதிகமாகவும் அரச அலுவலர் வேதனம் பெறுவதாகவும்-

சுகாதார சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகளில் கடமையாற்றுபவர்களின் விவரம் திரட்டப்பட்டு மிக தேவையான அத்தியாவசியமான சேவைகளில் உள்ளவர்களுக்கு மட்டுமே சேவை நீடிப்பு வழங்க பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருட முற்பகுதியில் நாடளாவிய ரீதியில் 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. இதனை அடுத்து அரச அலுவலகங்களில் மேலதிகமாக அரச அலுவலர்கள் பணியில் உள்ளமை தெரிய வந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக 57 வயதுக்கு மேற்பட்டவர்களின் விவரம் திரட்டப்படவுள்ளது. (95)

# கல்வியியற் கல்லூரி ஆசிரியரின் பயண ஏற்பாடு குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.24

கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா பயிற்சியை நிறைவுசெய்து, வவுனியா மாவட்டத்தில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் குறித்த அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# கரவெட்டியில் மீண்டும் மத்தியஸ்தர் சபையின் பணிகள்

வடமராட்சி,செப்.24

கரவெட்டி பிரதேச மத்தியஸ்த சபை பிணக்குகளை விசாரணை செய்து தீர்வுகாணும் நடவடிக்கைகளை கடந்த ஞாயிறு முதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

சபையின் தலைவர் எஸ். நாகலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அசாதாரண சூழ்நிலையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிணக்குகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகள் கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (173)


## அரசாங்க அறிவித்தல்
## கேள்வி அறிவித்தல்
### UNICEF PROJECT - 2006
**பிரதி மாகாணப் பணிப்பாளர் சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றது. தகுதியான பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் கீழே காட்டியவாறு கேள்விப்பிணை மற்றும் கேள்விப்பத்திர கட்டணம் ரூபா 250/- செலுத்தி எதிர்வரும் 04.10.2006 பிற்பகல் 3.30 மணிவரை கேள்விப்படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் விவரம் எழுதப்பட்டு சீல் வைத்த உறையில் இட்டு 05.10.2006 மு.ப. 10.30 மணிக்கு முன்னதாக இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் உடன் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி கலந்து கொள்ள முடியும். வேறு விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| வேலைகள் அட்டவணை | கேள்விப்பிணை |
|---|---|
| 01. Construction of Incinerator at DH, Chavakachcheri | 1,000.00 |
| 02. Improvement of Toilets at Maternity ward BH, Point Pedro | 3,500.00 |
| 03. Construction of 2000 Ltr. Water tank with Pump house at MOH's Office, Chavakachcheri | 2,200.00 |
| 04. Improvement of Water supply at PHC, Kulamangal | 1,300.00 |

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
(சி-51034)

## சொகுசுடைய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090
0777 246117

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22 . 04 . 1927



மறைவு 25 . 08 . 2006

அமரர் **வைரமுத்து தம்பிராசா**

எங்கள் குடும்ப விளக்கு
அணைந்தாலும் எங்கள்
நெஞ்சை விட்டு அகலாது
என்றும் பிரகாசித்துக் கொண்டு இருக்கும்
எங்கள் தெய்வமே.

கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு. (53788)

மனைவி
மருமகன் (செல்வராசா)

## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
## பதவி வெற்றிடம் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல்

1. பொதுமுகாமையாளர்
சம்பளத்திட்டம் - 101/08 - 31/99
5250 - 7750
120 X 10 - 130 X 10

**தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் முகாமை மட்டத்தில் உள்ளவர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் ஆறு வருடத்திற்குக் குறையாத முகாமை மட்டத்தில் அனுபவம்
அல்லது
ஆ. பட்டதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவியில் நான்கு வருடகால அனுபவம்
அல்லது
இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்தர பத்திரம் அல்லது க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

02. வயதெல்லை: 21-45 வரை

தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்ினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பும் பட்சத்தில் அவற்றை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளியிடப்படுமிடத்து நியமனத்தை இல்லாது ஒழிப்பதற்கும் வழிவகுக்கும். காரைநகரிற்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்ப முடிவு திகதி: 08-10-2006

தலைவர், காரைநகர் பநோ.கூ.சங்கம், காரைநகர் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவும்.

தலைவர்,
காரைநகர் ப.நோ.கூ.சங்கம், காரைநகர்.
(சி/51033)

## Study in India
### Brindavan College
affiliated to Bangalore University

With 2 A/L Passes OR Pending A/L Results

Join now for
B.B.M.(Management)
B.C.A.(Computer)
B.Sc.(Science)
Degree Courses & complete your degree in 2009 & save one year

Company Secretarial Services (Pvt) Ltd.
285C-1/1, Stanley Tillakaratne Mw., Nugegoda.
Tel:011 2854438 / 0777317043

## அவசர தேவை

தவிடு வகைகள், தேங்காய்ப் பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு, பழைய அரிசி அல்லது குருநல், பழைய தானிய வகைகள், சோளன், தினை, சாமி, ஒடியல் என்பன உடன் தேவை.

ரூபா 60 வரை கொடுக்கப்படும்.

மதுரா
221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.7505
(53859)

## தவறிவிட்டது

வீட்டுத் திறப்புக் கோர்வை ஒன்று 18.09.2006 அன்று சங்கரத்தைக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் J. சுஜிதரன், இந்து வாலிபர் சங்கம், சங்கரத்தை என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். T.P. 060 221 3468.

## நாய்கள் / கூடுகள் விற்பனைக்கு

1 1/2 மாத டோபர்மன்பின்சர் X அல்சேசன் குட்டிகள், பெல்சியம்செப்பேர்ட் ஆண் நாய், டோபர்மன் பின்ச்சர் பெண் நாய், 29x36 Inch, 50x60 Inch இரும்பு வலை கூடுகள் உடன் விற்பனைக்கு.

ஷைன்வெல் அக்குபஞ்ச்சர் நிலையம்
5/1, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.
(தபால் பெட்டி சந்தி).

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், புகையிரத நிலைய வீதியிலுள்ள வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்புக்கு:
07, பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## SINGAPORE offers
### TRAVEL/ TOURISM CAREER TRAINING
Immediate placement assured



NEW Travel & Tourism 6 months internship* With Allowance

A great bonanza from University of Sunderland

Foundation Degree
13 months of lectures & 6 months internship with Allowance.

There is no restriction to seek industrial placement in Singapore after graduation Scholarships for qualifying students offered by MDIS

After the completion of 13 months transfer to U.K possible subject to immigration laws in U.K high commision in Singapore.

The boom in tourism has made Singapore the hive of activity in the field of hospitality and travels. Being the hub of higher education the city-state offers lucrative opportunities for the deserving.

Basic requirment:-
* Diploma in Travel, Tourism* & Hospitality from a recognized body * G.C.E. A/L 2 subjects) * IELTS (6.0) or a minimum of 213 pts. (Computer based)/ 550 pts (paper-based) in Toefl
MDIS offers Diploma in Travel & Tourism with paid internship

Management Development Institute of Singapore - Singapore's oldest not-for-profit professional institute for lifelong learning

FOR ADMISSION INTERVIEWS CALL: 0773 - 055 125

"Students Counsellers" are required in Jaffna.
* Conditions apply

A NOT-FOR-PROFIT PROFESSIONAL INSTITUTE FOR LIFELONG LEARNING

Sri Lanka Representative Office
100, Sir Chittampalam A. Gardiner Mw., Colombo. 02.
Tel : 011-4 925 664. Mob. : 0773-418618
E-mail : srilanka@mdis.edu.sg
Website : www.mdis.edu.lk

MDIS — founded 1956 — Management Development Institute of Singapore
Where lifelong learning begins

International Business Division
Tel : (65) 6278 8000 Website : www.mdis.edu.sg


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் முரளீதரன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்மலிங்கம் முரளீதரன் (Project District Co-ordinator வெண்புறா நிறுவனம் - Unicef fund Project) 21.09.2006 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இ.தர்மலிங்கம் (முன்னாள் சுகாதார போதனாசிரியரும், பாடநூல் எழுத்தாளரும்) - பரமேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் அனுசாதேவியின் அன்பு கணவரும் தனுசனின் அன்பு தந்தையும், வைத்தியகலாநிதி இ.நன்னித்தம்பி (அகில இலங்கை சமாதான நீதிவான்) பத்மாவதி தம்பதிகள், செல்வி தேவி, அம்பலவாணர் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை) ஆகியோரின் அன்பு பெறாமகனும், டாக்டர் திருமதி. இந்திரா சத்தியநாதன் (முன்னாள் பொறுப்பதிகாரி கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை), திருமதி.லோகராணி பாலேந்திரன், திருமதி.விஜயராணி பத்மநாதன், திருமதி யோகராணி வன்னியசேகரம், திருமதி.தர்மராணி ஜெகநாதன் (சுவிஸ்), சிறீஸ்கந்தராசா, சண்முகதாசன் (Former Manager H.N.B Ltd, Manager Seylon Bank Ltd, Magaragama) யுகேந்திரராஜா, தயாபரன், நந்தகுமாரன் (Teacher, St.John's College, Jaffna) திருமதி.தயாவதி சபாநடேசன் (கனடா) ஆகியோரின் அன்பு தம்பியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை றேமன்ஸ் மலர்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, 24.09.2006 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடி,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
த.நந்தகுமாரன் (சகோதரன்)
(ஆசிரியர், சென் ஜோன்ஸ் கல்லூரி).

(53895)

## கனகரத்தினம் புவனேஸ்வரன் (சின்னராஜா)

(உரிமையாளர், காளியம்மன் மர அரிவு ஆலை)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கனகரத்தினம் புவனேஸ்வரன் (சின்னராஜா) அவர்கள் நேற்று (23.09.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா கனகரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகராணியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சிவியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
மனைவி.

## திருமதி சிவசுப்பிரமணியம் இராசம்மா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் இராசம்மா நேற்று (23.09.2006) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் சுகுமாரன் (கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, யோகமாலா, விக்கினேஸ்வரி, வனிதா ஆகியோரின் அன்புத் தாயும் ஞானேஸ்வரன், சிறீஸ்கந்ததாஸ் (ஊழியர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்), இராஜேந்திரன் (கிஸ்ணா பேக் ஹவுஸ்), சுரேந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் செல்வலக்ஸ்மி, ஶ்ரீஜீவன், கஜீவன், வேந்தன், சுஜீந்தினி, சுஜிந்திரன், சுஜீவன், சுதர்சினி, சுகிர்தா, செந்தூரிகா, கஸ்தூரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நரியூட்டான் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக்கொம்பனி லேன்,
மல்லாகம்.

தகவல்:
கணவர்,
பிள்ளைகள்.

(53889)

## கந்தையா பூபாலராஜா



கரந்தன், நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பூபாலராஜா அவர்கள் நேற்று (23.09.2006 ) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா- சகுந்தலம் தம்பதியரின் மருமகனும் செல்வரத்தினத்தின் கணவரும் இராசம்மா, இராசையா, நடராசா (காலஞ்சென்றவர்கள்), இராமர், இலட்சுமணர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேந்திரராசா, புஸ்பமலர்(கனடா), புஸ்பதேவி, கலாவதி, அருளானந்தம் (கனடா), தீராவதி, மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்பு தந்தையும் ரதி, பரமலிங்கம், பொன்னுத்துரை, சுந்தரமூர்த்தி, சியாமளாதேவி, சிறிகாந்தன், மனோகரன் ஆகியோரின் அன்பு மாமனும் துளசி, ராம், ஶ்ரீபதி, கஸ்தூரி, பிரதீப், பிரசாந், நமணன், நர்மதா, சர்மிளா, கனகசபை, ஐங்கரன், தாரணி, ஆரணி, அனுஷன், றஜீவ், சபீனா, கிரிதரன், கல்பனா, நிமலன், நிரோசன், றாஜீவன், சுகன்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (23.09.2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரந்தன்,
நீர்வேலி.

தகவல்:
பூ.செல்வரத்தினம்.
(மனைவி)

(53889)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் சதாசிவம் சியாமளா அவர்களின் அன்புத் தந்தை வாரித்தம்பி சதாசிவம் அவர்கள் காலமானதை இட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை,
தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

(53890)

# தவறிவிட்டது

பில் புத்தகங்கள் மற்றும் பல முக்கிய ஆவணங்கள் அடங்கிய வெள்ளை நிற கைப்பை ஒன்று யாழ். நகரப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 222 2523 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் இல. 310, சிறீசக்தி ஸ்ரோர்ஸில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

# தவறிவிட்டது

வீ.தமிழ்ச்செல்வம் சந்திரக்குமார் என்பவரது வரோதியநகர், திருகோணமலை பாடசாலை அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான பற்றுச்சீட்டு என்பன ஆனைக்கோட்டைக்கும் திருநெல்வேலி சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொ. கிருஸ்ணமூர்த்தி, லோட்டன் வீதி, மானிப்பாய் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே 222 3401

K.V. கொமினிகேசன்

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1974 ஆம் ஆண்டு பிறந்த 5' 6'' உயரமான கனடா பிரஜா உரிமையுடைய மணமகனுக்கு அழகான, பட்டதாரி மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

விளம்பர இல: 2927
மே/பா உதயன்

# தவறிவிட்டது

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை வசந்தநாதன் என்பவரது விசேட அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை ஆகியவை கடந்த 15.09.2006 அன்று சாவகச்சேரி சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி நகரசபையில் ஒப்படைக்கவும்.

## பாக்., இந்தியாவுக்கு சந்திரிகா பயணம்

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு சிறிலங்கா முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் பயணம் மேற்கொள்ள உள்ளார் எனத் தெரிகிறது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரனின் அழைப்பை ஏற்று சந்திரிகா நியூயோர்க் சென்றுள்ளார். லண்டன் திரும்பும் சந்திரிகா இலங்கை திரும்புவதற்கு முன்னதாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## மந்திகை ஆஸ்பத்திரி பற்சிகிச்சை பிரிவு நவீனமயமானது

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை (மந்திகை ஆஸ்பத்திரி) பற்சிகிச்சைப் பிரிவு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

போர்த்துக்கல் வைத்திய சேவைப் பிரிவினர் கடந்த சில மாதங்களாக பற்சிகிச்சைப் பிரிவை நவீன மயப்படுத்தினர்.

நவீன மயமாக்கல் வேலைத்திட்டம் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து அந்த இடத்தில் மீண்டும் பற்சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகின்றது.

பற்சிகிச்சைப் பிரிவை நவீனமயப் படுத்தும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் பற்சிகிச்சைப்பிரிவு எக்ஸ்றே பிரிவுக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. (ஐ-15)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனாவைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் குமாரசாமி ஶ்ரீமுருகன் அவர்களின் அன்புத் தாய் குமாரசாமி மனோன்மணி அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். போதனா வைத்தியசாலை,
தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

(53891)

அமரர் சு.பசுபதி எழுதிய
''இறைவற்கொரு பச்சிலை'' (சிறுகதைத் தொகுதி)
''லப்பசம் - டப்பசம்'' (சிறுவர் கதை)

## நூல் வெளியீட்டு விழா



இடம் : சைவ வித்தியாவிருத்திச் சங்கம் பிரார்த்தனை மண்டபம்.
காலம் : 24.09.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
தலைமை : திரு.அ.தற்பரானந்தன் [தலைவர், சைவ வி.வி. சங்கம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவ வி.வி. சங்கம்,
திருநெல்வேலி.

(53892)

# துயர் பகிர்கின்றோம்



அகில இலங்கை அஞ்சல் தந்தித்தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ். கிளையின் உப தலைவரும்

★ யாழ்ப்பாண அஞ்சல் அலுவலக அங்கத்துவ சகோதரருமான

**அந்தோனிப்பிள்ளை அன்ரன்போல்** அவர்களும்

★ தெல்லிப்பழை அஞ்சல் அலுவலக அங்கத்துவ சகோதரருமான

**நடராசா தவராசா** அவர்களும்



21.09.2006இல் வெவ்வேறு சம்பவங்களில் அகால மரணத்தை தழுவியதன் பொருட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், மறைவினால் துயருற்றிருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அகில இலங்கை அஞ்சல் தந்தித்
தொடர்புகள் சேவையாளர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

தலைவர், செயலாளர், நிர்வாகிகள்,
அங்கத்துவ சகோதரர்கள்.

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அருணாசலம் கந்தசாமி

(முன்னாள் அதிபர், முன்னாள் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் வலி.தெற்கு, உடுவில்)

திதி: 23.09.2006

செல்லும் இடமெல்லாம் சிரிக்கப்பேசி
பிறர்க்கு உதவும் நற்பண்பாளனே
பிரிந்து இருபது ஆண்டுகள் மறைந்தும்
அன்றுபோலவே எம்முடன் உள்ளாய்
உந்தன் உழைப்பால் உயர்ந்தோம் மறவோம்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(53886)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் மாணிக்கம்



அத்தியடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூர்த்த விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மாணிக்கம் 22.09.2006 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ.நவநாதன்,
மூர்த்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(53893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் சிக்கலில் குடாநாடு!

## ஐ.நா.அமைப்புகள் எச்சரிக்கை

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் அதிகரித்ததை அடுத்து விநியோகங்கள் தடைப்பட்டுள்ளமையால் யாழ்.குடாநாட்டை பெரும் சிக்கல்கள் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன என்று ஐ.நா. அமைப்புகள் எச்சரிக்கை செய்துள்ளன. தற்போதைய நிலைமையால் 60 ஆயிரம் பேர் விரட்டப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் அரைவாசிப் பேர் சிறுவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனிசெப் அமைப்பின் யாழ்.பிரதிநிதி ஜூடித் ப்ருனோ இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:-

உணவுப் பொருள்கள் விநியோகம் நிறுத்தம், 30 ஆயிரம் குழந்தைகள் உட்பட 60 ஆயிரம் மக்கள் வெளியேற்றம், மின்சாரமின்மை, குடிதண்ணீர் இன்மை ஆகியவற்றால் யாழில் பாரிய ஆபத்து உருவாகும் நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எமது அலுவலகத்துக்குக் கூட நாளாந்தம் ஒரு மணிநேரம்தான் மின்சாரம் கிடைக்கிறது. யாழில் பெற்றோல் இல்லை. எதுவித கட்டமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அனைத்தும் நிறுத்தப்பட்டு விட்டன.

வன்முறைகள் அதிகரிப்பினால் வீதிகள் முடக்கப்பட்டுவிட்டன. தரை வழிப் பாதையூடாக அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் முடங்கியுள்ளது. 2 கடற்கலங்கள் மூலமாக 5 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால், இங்கு 10 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் தேவையாகவுள்ளன.

உணவுப் பற்றாக்குறை நீடிக்குமேயானால் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலன் பாதிக்கும் பாரிய ஆபத்து ஒன்றின் விளிம்பில் நிற்கிறோம். இடப் பெயர்வினால் குழந்தைகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய குடிதண்ணீர் மற்றும் கழிப்பிட வசதிகள் எதுவும் இல்லை. போதுமான உணவும் மின்சாரமும் இல்லாத நிலை தொடர்ந்து நீடிப்பதால் அவர்கள் பாடசாலைக்குச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மக்கள் கடந்த ஆண்டுதான் ஆழிப் பேரலையால் இடம்பெயர்ந்தவர்கள். ஆழிப் பேரலையால் குடும்பத்தினரை இழந்த இந்த மக்கள் இப்போது மீண்டும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களில் பெரும்பான்மையோர் மீனவர்கள், விவசாயிகள், நாளாந்த கூலிகள் தற்போதைய யுத்த நடவடிக்கையால் இந்த மக்கள் அனைவருமே தங்களது வாழ்வாதாரங்களை இழந்துவிட்டனர் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம)

# சுனாமி பாதித்த கரையோரங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தம்

## டீசல் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட அவலம்

வடமராட்சி,செப்.24

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு கரையோரப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களான பருத்தித்துறை பிரதேச சபை, பருத்தித்துறை நகரசபை ஆகியவற்றினால் பவுசர்கள் மூலம் தினமும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

கடந்த ஒகஸ்ட்மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் டீசலுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனால், இப்பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

விநியோகம் நிறுத்தப்பட்டதால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். நீண்டதூரம் பயணித்தே அவர்கள் தமது தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டிய வர்களாக உள்ளனர். (ம-173)

# கோதபாய, பொன்சேகா சம்பூருக்கு விஜயம்

கொழும்பு,செப்.24

இராணுவத்தினால் அண்மையில் கைப்பற்றப்பட்ட சம்பூர் பகுதிக்கு படைத் தளபதிகள் உட்பட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ நேரில் விஜயம் செய்துள்ளார். திருகோணமலையின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராயவென சென்ற பயணத்தின்போதே அவர் அங்கு சென்றுள்ளார். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், விமானப் படைத் தளபதி டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்டோர் வெள்ளிக்கிழமை திருகோணமலை, சம்பூர் மற்றும் மாவிலாறு பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிவரும் திருகோணமலையின் தென்பகுதியின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இராணுவத்தினருடன் இக்குழு ஆராய்ந்தது. திருமலையின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து 22ஆம் படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் மென்தக சமரசிங்க விளக்கினார்.

கிழக்கு பிரதேச தளபதி மேஜர் ஜெனரல் நிசான்க விஜெசிங்க மற்றும் இராணுவம், பொலிஸ் ஆகியவற்றின் பொறுப்பாளர்களும் இந்த ஆலோசனையின் போது உடனிருந்தனர் - என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சிறுகதை, சிறுவர் கதை வெளியீட்டு விழா

எழுத்தாளர் அமரர் சு.பசுபதி எழுதிய 'இறை வற்கொரு பச்சிலை' என்னும் சிறுகதைத் தொகுதி 'லப்பாம்-டப்பாம்' என்னும் சிறுவர் கதை ஆகியவற்றின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சைவ வித்தியாவிருத்திச் சங்க பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமயில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் ஆய்வுரைகளை சைவ வித்தியாவிருத்திச் சங்கச் செயலாளர் கவிஞர் சோ.பத்மநாதன், கோண்டாவில் இந்து மா.வி ஆசிரியர் நா. சிதம்பரமும் நிகழ்த்தவுள்ளனர்.

நூல்களின் முதற்பிரதியை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், நல்லூர் ப.நோ.கூ.ச. தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

# கைது செய்யப்படுவோர் குறித்து எழுத்து மூல அறிவித்தல் அவசியம்

## வன்னி இராணுவத்தளபதியிடம் எம்.பி. வற்புறுத்து

வவுனியாவில் இராணுவத்தினரால் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பாக உறவினர்களுக்கு எந்தவிதமான எழுத்துமூல அறிவித்தல்களும் வழங்கப்படாமை தொடர்பாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் வன்னி இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எதிரிசிங்கவிடம் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்.

சமீப நாள்களாக வவுனியாவில் இராணுவத்தினரால் பெரும் அளவில் சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய சுற்றி வளைப்புகளின் போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்படுபவர்கள் தொடர்பாக அவர்களின் உறவினர்களுக்கு எந்தவிதமான அறிவித்தல்களும் வழங்கப்படுவது இல்லை.

இரவு வேளைகளில் வாகனங்களில் கடத்தப்படுவோர் பின்னர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் வீதிகளில் இறக்கி விடப்படுகின்றனர். இதுபெரும் மனித உரிமை மீறல் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வன்னி இராணுவத் தளபதியிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வவுனியா சுந்தரபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது இராணுவத்தினரால் 7 பேர் வரை கைது செய்யப்பட்டு இருப்பதாகவும் பின்னர் இவர்களில் 5 பேர் இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டதாகவும் அறியவருகின்றது. ஆனால் இராணுவ வட்டாரங்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று கூறின.

இது குறித்து கருத்துத் தெரிவித்த கிஷோர் எம்.பி இராணுவச் சீருடையில் வந்தவர்களாலும் முகத்தைக் கறுப்புத்துணியால் கட்டியவர்களும் ஆயுதத்துடன் வந்து கைதுசெய்திருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் மூலம் அறிய வந்திருப்பதாகவும் கிஷோர் எம்.பி. தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக தான் உடன் விசாரணை நடத்துவதாக இராணுவத் தளபதி உறுதி அளித்துள்ளார். சீருடையினரால் கொண்டு செல்லப்பட்ட 5 பேர் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. (312)



விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனை நேற்று முன்தினம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடிய போது எடுக்கப் பட்ட படம்.

### மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கின்ற ஒரு நிகழ்வாகத்தான் அது இருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தைப் பொறுத்த வரையில் துண்டுப் பிரசுரத்திற்கும் எங்களுக்கும் எந்தவொரு தொடர்பும் இருக்கவில்லை. அதைப்பற்றி எமக்குத் தெரியாது.

மூதூரில் வசிக்கும் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் நாங்கள் அவர்களுக்கு ஒரு விடயத்தைச் சொல்வதற்கு விரும்புகின்றோம்.

கடந்த முறை கூட அந்தப் பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டபோது நாங்கள் ஏற்கனவே நேரடியாக அப்பகுதிகளில் இருக்கின்ற முஸ்லிம் பிரநிதிகளோடு தொடர்பு கொண்டு எமது தாக்குதல் தொடர்பாகத் தெரியப்படுத்தியிருந்தோம்.

எனவே, அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் வரும்போது அவர்களுக்கு நேரடியாகவே தெரியப்படுத்துவோம்.

ஆனால், இந்த அநாமேதய துண்டுப் பிரசுரங்களுடன் எமக்குத் தொடர்பில்லை.

- என்று எழிலன் தெரிவித்தார். (ஐ-12)

### படைத் தளபதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தது.

இந்தக் குழுவினர் பலாலியில் யாழ். படைகளின் கட்டளைத்தலைமையகத்தில் மாநாடு ஒன்றை நடத்தினர். யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள முப்படைகளினதும் கட்டளையிடும் அதிகாரிகள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை, பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மாநாட்டில் விரிவாக ஆராயப் பட்டதாக பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

யாழ். குடாநாட்டின் பாதுகாப்புத் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ களத் தளபதிகளுக்கு விளக்கமளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முப்படைத் தளபதிகள் அடங்கிய இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் கிழக்குப் பகுதிக்கு - குறிப்பாக சம்பூர் பிரதேசத்திற்கு - விஜயம்செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

### பகிஷ்கரிப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லையைப் பகிஷ்கரிப்பது உங்களின் எதிர்காலத்திற்கு நீங்களே செய்கின்ற சேதம் போன்றதாகும்.

எதிர்வருகின்ற மாதங்களில் க.பொ.த. சா.த. பரீட்சைக்கு முகம் கொடுக்க உள்ளீர்கள். கடந்த காலத்தில் இலங்கையிலேயே உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டு உயர் நிலையை அடையும் அளவிற்கு இப் பிரதேச மாணவர்கள் உருவாகியுள்ளனர். இந்தக் கல்விப் பகிஷ்கரிப்பின் ஊடாக உங்களின் கல்வியின் மூலம் அப்படியானதொரு பெறுபேறுகளை பெறுவதற்கு தடையாக அமைந்துள்ளது.

ஏ-9 வீதி பாதுகாப்புப் படையினரால் மூடப்படவில்லை. அது யுத்தத்தை விரும்பிய பிரிவினரால் மூடப்பட்டது. அது மூடப்பட்டாலும், மக்கள் வாழ்வதற்காக ஏற்ற சூழ்நிலை பாதுகாப்புப் படையினரினால் மிக விரைவாக ஏற்படுத்தப்பட்டது. ஏதோ ஒரு வன்முறைக்குழுவினர் மறைந்திருந்து உங்களின் கல்வியை சீர்குலைத்துக் கொண்டு மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டும் இருப்பதை நிறுத்துவதற்கு பாதுகாப்புப் படையினர் எப்போதுமே நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அதன் ஒரு கட்டமாக ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டிய நிலை தோன்றியதோடு அது தற்போது நீக்கப்பட்டு கொண்டுவருகின்றது.

சில பிரிவினர் உங்களின் ஊடாக அவர்களின் குறுகிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக எடுக்கும் முயற்சிக்கு அகப் பட்டுக்கொள்ளவேண்டாம்.

தமிழ் மக்கள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை தற்போது தோன்றியுள்ளதால், மேலும் பாடசாலையைப் பகிஷ்கரிக்காது நாளையில் இருந்து அனைவரும் பாடசாலைக்கு சமூகம் அளிக்குமாறு இதன் ஊடாக அறியத்தருகின்றோம் - என்று உள்ளது.

### சு.க. - ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொண்டால் அதனை நாம் ஆதரிப்போம். மகிந்த சிந்தனைக்கு எதிரான சிந்தனையில் ஏற்கனவே ஜனாதிபதி ராஜபக்ஷ சென்றுகொண்டிருக்கின்றார். அப்படியான நிலையில் அரசை நாம் தொடர்ந்து ஆதரிக்க மாட்டோம்.

ஜே.வி.பிக்கும் சு.கட்சிக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றுவரும் வேளையிலேயே பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திக்குமாறு சு.கட்சித் தலைவர் எமக்குச் சவால் விடுகின்றார். நாம் அதனை ஏற்கிறோம். எந்த ஒரு கூட்டுக் கட்சியும் இல்லாமல் சுதந்திரக் கட்சி தேர்தலைச் சந்திக்க வேண்டும். - என்றார்.

அவரது இந்தக் கருத்துக்களுக்கு, பொலன்னறுவையில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அமைச்சர் மைதிரிபால காட்டமாகப் பதிலளித்தார். அவர் கூறியதாவது:-

ஜே.வி.பியிடம் இருந்து எமது கட்சிக்கு எந்தப் பரிந்துரைகளும் தேவையில்லை. சோமவன்ஸவின் கருத்துக்கு நான் பதிலளிக்காது போனால் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு நான் பொருத்தமற்றவன் ஆவேன்.

சோமவன்ஸ நாடு திரும்புவதற்கு முன்னர் ஜே.வி.பி. நல்ல முறையில் முன்னேற்றம் கண்டு வந்தேன். அவர் லண்டனில் இருந்து வந்தது முதல் அக் கட்சி கடும் பின்னடைவுகளைச் சந்திக்கத் தொடங்கிவிட்டது.

கடந்த மாகாணசபைத் தேர்தலின் பின்னர் நாம் பொதுத் தேர்தலை நடத்தியிருந்தால் ஜே.வி.பிக்கு யார் பழைய பாணியில் செயற்படுகின்றார்கள் என்பது தெரியவந்திருக்கும். நாங்கள் அப்படி நடந்துகொள்ளவில்லை. எனினும் எமது கட்சி ஆதரவாளர்கள் தேர்தல் வேண்டும் என்கிறார்கள். ஆனால், ஜே.வி.பியை சிக்கலுக்குள் மாட்டாதீர்கள் என்று ஜனாதிபதி தெரிவித்தார். - இவ்வாறு அமைச்சர் மைத்திரிபால மேலும் கூறினார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org